செ.வெ.எண்:-64/2020 நாள்:27.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை பணியில் ஈடுப்பட்டுள்ள 2483 காவலர்களுக்கு கபசுரக் குடிநீர் சூரணப் பொட்டலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (27.04.2020) கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை பணியில் ஈடுப்பட்டுள்ள காவலர்களுக்கு கபசுரக் குடிநீர் சூரணப் பொட்டலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்று நோயினைத் தடுக்கும் விதமாக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல உத்திகளைக் கையாண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் கோவிட்-19 தொற்று நோயினை தடுப்பதற்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கியது. அதில் நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுரகுடிநீரை பொதுமக்களுக்கு வழங்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஒரு வழிகாட்டுதலை வழங்கியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 11 மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் அரசு மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த மூத்த இந்திய மருவத்துவர்களும், மூத்த அலோபதி மருத்துவர்களும் இடம்பெற்று, ஆலோசனை செய்து அரசுக்கு தங்களுடைய பரிந்துரைகளை வழங்கினார்கள்.

அதில், மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஹோமியோபதி உள்ளிட்ட மருத்துவ முறைகளில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வழிமுறைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள **“ஆரோக்கியம்”** என்ற சிறப்புத் திட்டம் மூலம் வழிமுறைகளை வெளியிட பரிந்துரையை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வல்லுநர்களின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாட்டு பொதுமக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளவும், சிகிச்சை பெற்ற பின் உடல் நலத்தைப் பேணவும் ஆரோக்கியம் என்ற சிறப்புத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதற்கும் உடல் நலம் பேணுவதற்கும், பொதுமக்களுக்கு நிலவேம்பு நீர் மற்றும் கபசுரக் குடிநீர் சூரணப் பொட்டலங்களை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை பணியில் ஈடுப்பட்டுள்ள 2483 காவலர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதற்கும் உடல் நலம் பேணுவதற்கும், கபசுரக் குடிநீர் சூரணப் பொட்டலங்களை வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு திட்டத்தின் வழிமுறைகள், கொரோனா நோய்க்கான சிகிச்சை அல்ல எனவும், பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க மருத்துவ ரீதியாக ஆய்வு செய்யப்பட்ட வழிமுறைகள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ராஜ்குமார், மாவட்ட சித்தா அலுவலர் திரு.ரபீக்அகமது, திண்டுக்கல் மாவட்ட துணைகாவல் கண்காணிப்பாளர் திரு.மணிமாறன் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---